# இசுறு உதான சேமிப்புக் கணக்கு

### உற்பத்தியின் தன்மை

பராயமடையாதவர் சேமிப்புக் கணக்கு.

### வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் பயன்கள்

- உயர் வட்டி வீதம்

சாதாரண சேமிப்புக் கணக்கு வட்டியை விட மேலதிகமாக 1% வட்டி.

நடப்பு வட்டி வீதத்திற்கு தயவு செய்து https://www.peoplesbank.lk/interest-rates/ இனைப் பார்க்கவும்.

- கணக்கில் உள்ள மீதிக்கு தினசரி வட்டி கணிப்பிடப்பட்டு மாதாந்தம் வரவு வைக்கப்படும்.

- பரிசுத் திட்டம்

மக்கள் வங்கியில் இசுறு உதான கணக்கு வைத்திருப்பவர்கள் கணக்கின் மீதி குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும்போது பரிசுகளைப் பெறுவார்கள்.

நடப்பு பரிசுக்கு தயவு செய்து https://www.peoplesbank.lk இனைப் பார்க்கவும்.

- கணக்கைத் திறப்பதற்கு அல்லது கணக்கில் பணம் வைப்பிலிடுவதற்கு பரிசு வவுச்சர்கள்.

- பிறப்பிலிருந்து முன்பள்ளிக்குச் செல்லும் வரை கணக்கைத் திறப்பதற்கு ஆரம்ப வைப்புத் தொகையை வங்கி வைப்பிலிடும். ஏற்கனவே முன்பள்ளியில் உள்ள சிறார்களுக்கு வங்கி ரூ.250/- வைப்பிலிடும்.

### ஆரம்ப வைப்புத் தொகையும் கட்டணங்களும்

- ஆரம்ப வைப்புத் தொகை வங்கி ரூ.100/-
- கணக்கு கூற்றுக்களை வழங்குவதற்கு.
- கணக்கு புத்தகத்தின் பிரதியை வழங்குவதற்கு.
- கணக்கு மீதியை உறுதிப்படுத்தி கடிதம் வழங்குவதற்கு.
- வரிகள்

இலங்கை அரசாங்கத்தினால் மற்றும்/அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் கோரப்படுகின்ற நியதிச் சட்ட அறவீடுகள் வட்டியிலிருந்து கழிக்கப்படும்.

## தகைமை

- 0-05 வயதுக்கு இடைப்பட்ட பராயமடையாதவர்கள் பெயரில் இந்தக் கணக்குகளைத் திறக்க முடியும். (இலங்கை பிரசைகளுக்கு)

## கணக்கைத் திறப்பதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

- வங்கியின் இசுறு உதான கணக்குகளைத் திறக்கும் படிவத்தைப் பூர்த்திசெய்து கீழுள்ள ஆவணங்களுடன் வங்கியின் எந்த ஒரு கிளையிலும் சமர்ப்பிக்க முடியும்.
  - பெற்றோர் /பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை (NIC) அல்லது தேசிய அடையாள அட்டையின் (NIC) இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியான கடவுச் சீட்டின் / சாரதி அனுமதி பத்திரத்தின் பிரதி.
  - வதிவிட முகவரியும் தேசிய அடையாள அட்டையில் (NIC) குறிப்பிடப்பட்டுள்ள முகவரியும் வேறுபட்டிருந்தால் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணம்.

## பிரதான நியதிகளும் நிபந்தனைகளும்

- கணக்குத் திறக்கும் படிவத்தில் தரப்பட்டுள்ள அந்த உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நியதிகளையும் நிபந்தனைகளையும் வாசித்து அறிந்துகொள்ள வேண்டும். மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்கு வங்கியின் பின்வரும் இணையதளத்தினை நாடவும் : https://www.peoplesbank.lk/